Registered as a Newspaper

ஜப்பானிய
'அய்மன்தே'
காப்பு
உலகமெங்கும் பிரசித்திபெற்ற கவர்ச்சிகரமான காப்பு
ஜப்பானிய சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது.
விலை: ரூ 146
GENERAL TRADES
237, Power House Road.
JAFFNA.
T'Phone: 22834

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ-1/-

ஜப்பானிய
'அய்மன்தே'
காப்பு
உடம்பிலுள்ள நோவு, நாரிப் பிடிப்பு, இடுப்புவலி, மூட்டுவலி தசைப்பிடிப்பு முதலிய வியாதிகளுக்கு நிவாரணி
கிடைக்குமிடம்:
ஜெனரல் ட்ரேட்ஸ்
237, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22884

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 9 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 11 (21-02-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:82

## தலைவேறு உடல்வேறு



விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்த சுந்தரலிங்கம் பயூரனின் (வயது 7) உடலம். குண்டினால் இவரது தலைவேறு உடம்பு வேறாக வீசப்பட்டது. உடலெங்கும் எரிந்து கருகிக் காணப்பட்டது

# இணுவில் தாக்குதல்போல மேன்மேலும் தொடருமாம்

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, பெப். 21

இணுவிலில் புதன்கிழமை நடந்த விமானத் தாக்குதல்கள் போலத் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படும். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை வருமாறு;

இணுவிலில் கடந்த புதன்கிழமை நடந்த விமானத் தாக்குதலில் 3 பயங்கரவாதிகள் இறந்தார்கள். 4 பயங்கரவாதிகள் காயமடைந்தனர்.

பயங்கரவாதத்தை ஒழிக்கவும் முகாம்களை அழிக்கவும் இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

தரை மார்க்கமாகச் சென்று பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. நிலக்கண்ணி வெடிகளை பயங்கரவாதிகள் பயன் படுத்துவதே இதற்குக் காரணம்.

அதனால்தான் ஆகாயத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே பொதுமக்கள் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக்கொள்ள பயங்கரவாத முகாம்கள் அருகில் இருப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கப்படுகின்றனர்கள்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது

## தெஹிவத்தை மரணம் நாற்பது ஆக உயர்வு

திருகோணமலை, பெப். 21


தெஹிவத்தை நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் பலியானவர்கள் தொகை 40 ஆக அதிகரித்துள்ளது

இதில் 35 பேர் சிங்களப் பொதுமக்கள். 5 பேர் சிப்பாய்கள்.

ஒருவர் கொழும்பில் மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டது

திருமலையில் வைத்து 39 பேர் மரணமானார்கள்.

## பிஞ்சில் கருகிய மலர்



தாவடிச் சம்பவத்தில் மரணமான மற்றைய அப்பாவிச் சிறுவன் ஸ்ரீரங்கன் ராஜசேகரன் (வயது 10). பல இடங்களில் உடல் பகுதி எரிந்து சருகிக் கிடக்கிறது.

# திம்புத்திட்ட அடிப்படையில் தான் இனப்பிரச்சினைக்குதீர்வு

## ஆயுதங்களை ஒரு மாதத்தில் கீழே வைத்தால் மன்னிப்பு

### நாடாளுமன்ற தொடக்க உரையில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப். 21

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் புதுடில்லியில் வைத்து திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்த திட்டத்தின் பிரகாரம் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இணங்க முடியும்.

தமிழ் தீவிரவாதிகள் தீர்வுக்கு உடன்பட்டு ஒரு மாத காலத்தினுள் ஆயுதங்களைக் கீழே போட்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுக்களை அடுத்து புதுடில்லியில் தீர்மானிக்கப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வு எதற்கும் இனிமேல் இணங்க முடியும் என்று அவர் சொன்னார்.

அதைவிட்டு வேறுவழிகளில் தீர்வைக் காண இணங்க முடியாது.

தீவிரவாதிகள் வன்செயலைக் கைவிட்டு, ஆயுதங்களை கீழேபோட்டால் மட்டுமே தீர்வு காண வழி பிறக்கும்.

இனப்பிரச்சினைக்கு அத்தகைய தீர்வு ஒன்று ஏற்பட்ட பின்னர் உடனடியாக பின்வரும் 9 அம்சங்களையும் செயற்படுத்த வேண்டும்.

1. அரசியல் அமைப்பில் அரசகருமமொழி, தேசிய கொடி, தேசிய கீதம் ஆகியவை தொடர்பான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டும்.

2. வன்செயலில் ஈடுபட்டவர்கள் அவற்றை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரில் நேற்று திடீர் ஹர்த்தால்

நல்லூர், பெப். 21

நேற்று யாழ்நகரில் கடை அடைப்பு-ஹர்த்தால் நடைபெற்றது. இளைஞர் குழு ஒன்று நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில் நகரின் பல பகுதிகளுக்கும் சென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடைகள் பூட்டப்பட்டன.

மினி பஸ் போக்குவரத்துச் சேவையும் வெகுவாகக் குறைந்திருந்தது. நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

நகரத்தில் திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தங்களால் வெளியூர்களில் இருந்து வந்த மக்கள் பெரும் பீதியும் பதற்றமும் கொண்டவர்களாகச் சிதறி ஓடினர்.

புதன்கிழமை இரவு யாழ்ப்பாண நகரத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதன் இரவு நடந்த துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விவரப் பிரசுரம்

### ஈ. பி. ஆர். எல். எவ். வெளியிட்டது

யாழ்ப்பாணம், பெப். 21

நேற்று அதிகாலை யாழ் நகரத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் சோ. ஜெகநாதனின் (அமீன்) இறுதிக் கிரியை நேற்று சாவகச்சேரிப் பகுதியில் நடந்தது.

சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்ட இறுதி ஊர்வலம் ஐந்து மைல் தூரம் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலையில் அமீன் கொல்லப்பட்டதும், ஏனைய உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதும் மற்றொரு இயக்கத்தின் திட்டமிட்ட செயல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குடியேற்ற கொழும்பில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, பெப். 21

திருகோணமலைப் பகுதியில் குடியேற்றப்படுவதற்காக கொழும்பில் ஆள்திரட்டப்படுவதாகத் தெரியவருகின்றது

சாப்பாடும் மாதாந்தம் ஆயிரம் ரூபா பணமும் தரப்படும் என்று கூறியே ஆள்திரட்டும் வேலை இடம்பெறுகின்றதாம்.

இப்படித் திரட்டப்படுபவர்களை திருகோணமலைப் பகுதிக்கு அனுப்புவதற்கு லொறிகளை இலவசமாகக் கொடுத்து உதவ கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர்கள் சிலர் முன்வந்து உள்ளனராம்.

## முச்சந்திமுரளி



திம்பு, டில்லி, கொழும்பு எண்டு திட்டங்களைத் தீட்டிக் கொண்டு இருப்பினம். அப்ப அதுக்கிடையிலை தமிழ்ச் சனம் அழியிறதே?

## சுபநேரம்

21 - 02 - 1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6-31 முதல் 8-01 வரை
ராகுகாலம்;
11-01 முதல் 12-31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## அபிவிருத்தி கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான ஒன்றியத்தினால் இன்று வெள்ளிக்கிழமை (21-02-86) சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடத்தப்பட இருந்த அபிவிருத்திக் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை சனிக்கிழமை (22-02-86) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் இப்போதைய

# இராணுவ பலத்துக்கு பண்டாரிவிட்ட தவறு காரணம்!

புதுடில்லி, பெப். 20

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி தவறு விட்டிருந்தார் என்பதை இந்தியா உணர்ந்திருக்கிறது.

பண்டாரி விட்ட தவறைப் பயன்படுத்தி இலங்கை தனது இராணுவ பலத்தை இப்போதைய அளவுக்கு அதிகரித்தது.

இவ்வாறு இந்து பத்திரிகையில் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இந்து' நாளிதழில் பிரபல அரசியல் விமர்சகர் திரு ஜி கே. ரெட்டி இது சம்பந்தமாக பின்வருமாறு எழுதியிருக்கிறார்;-

இலங்கை இனப்பிரச்சினைகளுக்கு அவசர அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற உந்துதலில் திரு. பண்டாரி தந்திரோபாய ரீதியில் பெரிய பிழையொன்றை விட்டு விட்டார்.

இப்படி புதுடில்லி உணர்ந்துள்ளது.

தமிழ் போராளிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தமிழரை நியாயமாக நடக்கச் செய்தால் சமரீதியிலான தீர்வு ஒன்றைக் கொண்டு வரச் செய்வதில் இலங்கையை உடன்படச் செய்ய முடியும் என்று திரு. பண்டாரி அச்சமயம் நினைத்துக் கொண்டார்

திரு. பண்டாரியின் இந்த நினைப்பைப் பயன்படுத்தி. அரசியல் தீர்வில் இலங்கைக்குநாட்டமிருப்பதாக நம்ப வைத்து, மறுபுறத்தால் இராணுவ பலத்தை திரு. ஜெயவர்த்தனவும் அவரின் ஆலோசகர்களும் பலப்படுத்திக் கொண்டவர்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழரின் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பது இலங்கையின் போக்கால் இப்போது உணரப்பட்டுள்ளது.

இலங்கையில் வன்செயல்கள் அதிகரிப்பது குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கவலை தெரிவித்து இருக்கிறார்.

இதன் மூலம் திரு. ஜெயவர்த்தனவின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை திரு. சாந்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சு!

### கொமாண்டோ வாகனம் மீது

மட்டக்களப்பு, பெப். 21

பொத்துவில் — மொனராகலை வீதியில் திருக்கோயில் நோக்கிச் சென்று கொண்டிருந்த கொமாண்டோக்களின் வாகனம் ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டது. இச் சம்பவத்தில் ஜீப்புக்குச் சேதம் ஏற்பட்டது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

தொடர்ந்து அப் பகுதியில் கொமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பின்னர் தேடுதல் நடத்தப்பட்டது. 4 பேர் விசாரணைக்காகக் கொமாண்டோக்களினால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கொழும்பில் சிகிச்சை

கொழும்பு, பெப். 21

தெஹிவத்தை நிலக்கண்ணி வெடியில் சிக்கிக் காயமடைந்தவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரி ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 30 பேர்களுக்குத்தான் இந்த இரண்டு ஆஸ்பத்திரிகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப் படுகின்றது.



விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகள் நிலத்தில் விழுந்து வெடித்த இடங்களில் ஏற்பட்ட ஆழக் குழிகளில் ஒன்று.

## ஆவரங்காலில் ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து சுட்டது

அச்சுவேலி, பெப். 21

நேற்று (வியாழன்) காலையில் ஆவரங்கால் பகுதியில் தாழப் பறந்த ஹெலிக்கொப்டர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

காலை 8 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தால் ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலிப் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

காலையில் எதிர்பாராத விதமாக நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் தோட்டங்கள்; வீதிகளில் நின்ற பொதுமக்கள் பிளாறி போடப்பட்ட வீடுகளை நோக்கி ஓடினார்கள்.

ஆவரங்கால் சந்திக்கும் ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்கர் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஹெலிக்கொப்டர் சூட்டுச் சம்பவம் நடந்தது.

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து மொழி படங்களிலும் நானே பேசி நடித்தேன்

''சத்திய சோதனை'' படத்தில் சிறு வேடத்தில் அறிமுகமானவர் ராஜசுலோசனா 'மாங்கல்யம்' படத்தில் முக்கிய வேடத்தில் முதல் முறையாக வசனம் பேசி நடித்தவர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என சுமார் முன்னூறு படங்களில் இவர் நடித்துள்ளார். இவருக்கு நடனத்தின் மீது அலாதி பிரியம்.

அவர் இதைப் பற்றிக் குறிப்பிடுகையில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என ஐந்து மொழிப் படங்களில் நடித்த முதல் நடிகை என்றே என்னைச் சொல்லலாம். இந்த ஐந்து மொழிப் படங்களிலும் நானே பேசி நடித்தேன்.

சினிமாவில் நடித்தாலும், நடனத்தின் மீது மோகம் இருந்து கொண்டே இருந்தது. இது எனக்கு இளம் வயதிலேயே ஏற்பட்ட மோகம்.

ஒருமுறை குச்சுப்புடி நாட்டியத்தைப் பழைய பாணியில் நடத்தி வந்த வேதாந்தம் சத்யநாராயண சர்மாவின் நிகழ்ச்சியைப் பார்த்தேன். அந்த நாட்டியத்தில் ஆண்கள் பெண் வேடமிட்டு ஆடினார்கள்.

அந்த நிகழ்ச்சியைப் பார்த்த பின் அந்த நாட்டியத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

தமிழ் நாட்டில் குச்சுப்புடி நடனம் இல்லை. நீங்கள் ஒத்துழைப்புத் தந்தால் ஒரு குச்சுப்புடி டான்ஸ் பள்ளியை ஆரம்பிக்கின்றேன்'' என்று வேதாந்தம் ராகவய்யா, பசுமார்த்தி கிருஷ்ணமூர்த்தி, வேம்பட்டி பெரிய சத்யம் ஆகியோரிடம் கேட்டேன்.

### கூறுபவர் ராஜசுலோசனா

''உனக்குக் கற்றுக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கற்றுத் தரப் போகிறோம்'' என்று சொன்னார்களே தவிர, யாரும் கற்றுத் தரவில்லை.

அதனால் எப்படியாவது அந்த நடனத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது.

அகமதாபாத்தில் இருக்கும் சி. ஆர் ஆச்சார்யலு என்ற குரு எனக்குக் கிடைத்தார்.

சென்னையில் முதல் குச்சுப்புடி பள்ளி தொடங்கப்பட்டது. படங்களிலும் நடித்துக் கொண்டு வெகு சிரமத்தின் மத்தியில் நடனத்தையும் கற்றுக் கொண்டேன்

என்னுடைய நடனப் பள்ளியில் இலவசமாகவே மற்றவர்களுக்கு நடனத்தைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தேன்'' என்றார்.

## பூசினிக்காய் கொலை

பிரேஸில், பெப்.20 பூசினிக்காய் ஒன்றைக் களவு எடுத்ததற்காக 7 க்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளை அடித்து, பின்னர் சுட்டுக் கொலை செய்த ஒரு நபரை பிரேஸில் பொலீஸார் கைது செய்தனர்.

# தென். லெபனானில் இஸ்ரவேல் தீவிர தேடுதல் வேட்டை

### கடத்தப்பட்ட துருப்புக்களை கண்டுபிடிக்க முயற்சி

ஜெருசலேம், பெப்.20 தென் லெபனானில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 2 இஸ்ரவேலிய துருப்புக்களை தேடி இஸ்லாமிய பகுதிகளில் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்கடத்தலுக்கு தாமே பொறுப்பு என்று இஸ்லாமிய இயக்கமொன்று உரிமை கோரியதாக அறிவிக்கப்பட்டது

இஸ்ரவேல் வெளிநாட்டு அமைச்சர் இது பற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தென் லெபனான் பகுதியில் தொடர்ந்து இஸ்ரவேலிய துருப்புகள் தங்கியிருப்பர்

கடத்திச் செல்லப்பட்ட துருப்புக்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இஸ்லாமிய இயக்க கெரில்லாக்களைத் தேடி மறைவிடங்கள், புதர்கள் மற்றும் மருதிகள் அனைத்திலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

கடத்தலுக்கு உரிமை கோரும் இஸ்லாமிய இயக்கமும், தெற்குலெபனானிலிருந்து இஸ்ரவேலிய துருப்புக்கள் வாபஸ் ஆகுவதை நிர்ப்பந்திப்பதே தனது திட்டமென தெரிவித்துள்ளது.

### புயல் மண்சரிவு

நியூயோர்க், பெப், 20 வட அமெரிக்காவில் புயல், மண்சரிவு காரணமாக வட கலிபோர்ணியோ,நெவேடா பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது,

7 பேர் இறந்ததாகவும் 6 பேர் காணமற் போய்விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு நகரங்களிலும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### பாரத ஒருமைப்பாட்டு சபை

புதுடில்லி, பெப், 20 பாரத தேசிய ஒருமைப்பாட்டு சபை திருத்தி அமைக்கப்படுகிறது.

பிரதமர் ராஜீவ் காந்தி இதன் தலைவராக இருப்பார்.

நாட்டின் வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டுக்கும் தேசிய ஒருமைப்பாட்டு அத்திபாரமாகும் என்று காந்தி தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

### ஆறு மொழிகள் தெரிந்த எட்டு வயதுச் சிறுமி

பாங்கொக், பெப். 20 எட்டு வயதுச் சிறுமிக்கு 6 மொழிகள் தெரியும்!

அந்தச் சிறுமி தாய்லாந்து நாட்டில் வசிக்கின்றார்.

நாச்சரி திபவாட் என்ற பெயருள்ள இச்சிறுமி, பிறவியிலேயே ஊமையானவர்.

பள்ளிக்கூடத்தில் அனுமதி கிடைக்கவில்லை.

இதனால் வீட்டில் இருந்தபடியே படிக்கத் தொடங்கினார். தானே தனது படிப்பை வளர்த்துக்கொண்டார்.

பிரெஞ்சு, ஆங்கிலம், சீன, ஜெர்மன், ஜப்பான் நாட்டு மொழிகளை இச்சிறுமி நன்றாகப் படித்துள்ளார்.

சிறுமியின் தாய் மொழி தாய்லாந்து மொழி.

### மோசடி வெற்றி

வாஷிங்டன், பெப் 20 நடந்து முடிந்த பிலிப்பீன்ஸ் தேர்தல் சுத்த மோசடியினால் வெல்லப்பட்டது

இவ்வாறு அமெரிக்க செனட்சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பிரேரணை வாக்கெடுப்பில் விடப்பட்ட பொழுது 85 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது'

### ஜனாதிபதி பதவிக்கு ஆபத்து

பொன், பெப். 20 மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெமுட் கோலின் பதவிக்கு ஆபத்து வந்து விட்டது.

ஊழல் சம்பந்தமான அரசு விசாரணை ஒன்றில் அவர் அளித்த சாட்சியம் குறித்து அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது

இச்சம்பவம் அவரின் பதவிக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டது.

குற்றவியல் விசாரணை ஒன்றில் மேற்கு ஜேர்மன் ஜனாதிபதி ஒருவர் சம்பந்தப் பட்டுள்ளது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

ஊழல் சம்பந்தமான நாடாளுமன்ற விசாரணை ஒன்றில் ஜனாதிபதி பொய்ச் சாட்சியம் அளித்தார் என்ற குற்றச் சாட்டு பற்றி விசாரணை நடைபெறுகிறது.

## வெளி உலகில்

# பங்களாதேஷில் புரட்சி உருவாக காரணமாகாதீர்

### எதிர்க்கட்சிகளுக்கு எர்ஷாட் எச்சரிக்கை

டாக்கா, பெப். 20 பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் எனது திட்டத்தைக் குழப்ப முயற்சித்தால் மக்கள் புரட்சியின் மூலம் ஜனநாயகத்தைக் கண்டு விடுவார்கள்.

இவ்வாறு ஜனாதிபதி எர்ஷாட் எதிர்க்கட்சிகளுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

தென்பகுதி மாகுறு மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்தே இந்த எச்சரிக்கை அவரால் விடுக்கப்பட்டது.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்,

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெற விருக்கும் தேர்தலில் எல்லா அரசியல் குழுக்களும் பங்கு பற்ற வேண்டும்.

அப்படி இல்லையெனில் மாற்று வழியில் – புரட்சி வழியில் தமது அரசை அமைக்க அவர்கள் கருத்துக் கொள்ளக்கூடும்.

எதிர்க்கட்சிகளின் தர்க்க ரீதியற்ற, அழுங்குப் பிடியான, ஜனநாயக விரோத வாக்குகளே இப்படியொரு நிலையைத் தோற்றுவிக்கக் காரணமாக இருக்கும்.

மக்கள் அப்படியொரு வழியைத் தேர்ந்தெடுத்து விட்டால் அந்த எழுச்சி அலையில் இந்த எதிர்க்கட்சியினரும் தான் விட்டு வைக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு எர்ஷாட் தொடர்ந்து எச்சரித்துள்ளார்.

## ஊர்காவல் படைக்கு ஆள்சேர்க்க கட்டுப்பாடு

### பலர்வீட்டில் இருந்தவாறு அலவன்ஸ் பெறுகிறார்களாம்

கொழும்பு, பெப் 21 நிதி பற்றுக்குறை காரணமாக ஊர்காவல் படைக்கு மேலும் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளது.

ஊர்காவல் படையில் சேர்ந்தவர்கள் பணிபுரியாமலே வீடுகளில் இருந்தவண்ணம் அலவன்ஸ் பணம் எடுப்பதிலேயே அக்கறையாக இருக்கின்றனர் என்று தெரியவந்துள்ளதாம்.

வீட்டில் நித்திரை கொண்டுவிட்டு இந்த அலவன்ஸை எடுக்க பலர் விருப்புகின்றனர் என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இப்படி தவறு விடும் ஊர்காவல் படையினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தனி உதவிப் பொலீஸ் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### இளைஞர் பலி!

மட்டக்களப்பு, பெப். 21 மட்டக்களப்பு – கல்முனை வீதியில் தேத்தாத்தீவு என்னும் இடத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

ஆயுதப்படையினரைக் கண்டதும் இந்த இளைஞர் ஓட முயற்சித்தாராம். அச்சமயம் படையினர் சுட்டனர்.

இறந்த இளைஞரின் சடலத்தையும் படையினர் எடுத்துச் சென்றனராம்.

### முழங்காவில் கிராம அபிவிருத்திநிதி

யாழ்ப்பாணம், பெப். 21 முழங்காவில் கிராம அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கும்படி கிளிநொச்சி அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

முழங்காவில் படித்த வாலிபர் குழாய்க் கிணற்றுத் திட்டக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் திரு. ரி ஏரம்பமூர்த்தி அரச அதிபருக்குச் சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முழங்காவில் பாடசாலைக்கு ஒருகுழாய்க்கிணறு முழங்காவில் வைத்தியசாலைக்கு ஒரு நோயாளர் வார்ட் ஆகியன நிறுவ நிதி ஒதுக்கும்படியும் மகஜரில் கோரப்பட்டு உள்ளது.

### இலவச மூக்குக்கண்ணாடி

அச்சுவேலி,பெப் 21 அச்சுவேலி லயன்ஸ் கழகம் இலவசமாக மூக்கு கண்ணாடிகளை வழங்குவதற்கு விவரங்களை சேகரித்து வருகின்றது.

அச்சுவேலி கோவில் பற்றுப் பிரிவில் வசிக்கும் கண்பார்வை குறைந்த வறியமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அச்சுவேலி கோவில் பற்றில் வசிக்கும் கண் பார்வை குறைந்தவர்கள் தமது விவரங்களை லயன்ஸ் கழகத்திற்குச் சமர்ப்பித்தால் கண் வைத்திய நிபுணர் பரிசோதனை செய்து இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் என அச்சுவேலி லயன்ஸ் கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### வகுப்புகள்

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை கலா நிலையத்தில் ஆறு தொடக்கம் பொதுத்தராதரம், தொழிலாளர் பல்கலைக்கழகத் தரம் வரை, ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் ஆங்கிலம் கற்பிக்கின்றார். பரீட்சைகளுக்கு பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

★ பலாலி விமான நிலையப்பகுதியில்

# பீதியால் வெளியேறியவர்களுக்கு சுந்தரபுரத்தில் குடியிருப்பு வசதி

### இளைஞர்கள் ஏற்பாடு

காங்கேசன்துறை, பெப். 21 பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில் இருந்து பீதியால் இடம் பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ள மக்கள், இளைஞர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியால் வயாவிளான் ''சுந்தரபுரம்'' என்னும் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில் வாழ்ந்த பொதுமக்கள் அப்பகுதியில் நிலவும் பதற்ற நிலையால் தமது விவசாயப் பயிர்கள், வீடுகள், உடைமைகள் ஆகியவற்றை இழந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

இவர்கள் பாடசாலைகளில் தங்கியிருந்தமையால் பாடசாலைகள் இயங்க முடியாதசூழ்நிலை ஏற்பட்டதுடன் அந்த மக்களும் தமது வாழ்க்கையைத் தொடர முடியாமல் கஷ்டமுற்றனர்.

இதையடுத்து இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சியால் இவ்வாறு நிர்க்கதிக்குள்ளாகிய 200 குடும்பங்கள் வயாவிளான் ''சுந்தரபுரம்'' என்னும் கிராமத்தில் பாதுகாப்பாகக் குடியமர்த்தப்பட்டனர்.

இவர்கள் தமது வாழ்க்கையை தொடருவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு சமூக சேவை இயக்கங்களையும் பொதுஜன சேவா சங்கங்களையும் கோரியுள்ளனர்.

அவசரமாக இவர்களுக்கு குடிநீரைப் பெறுவதற்கு கிணறு ஒன்று தேவையாக உள்ளதால் அதனைத் தோண்ட உதவுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

### அம்பாறையில் அறுவடை

அம்பாறை,பெப் 21 அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடை தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக விளைச்சல் இம்முறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# வெளிவாரிப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துக

### மாணவர் மன்றம் வித்திக்கு மகஜர்

யாழ்ப்பாணம், பெப்.21 பேராதனை பல்கலைக் கழகம் தனது வெளிவாரிப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த மாட்டாது என்ற தீர்மானம் ஒருதலைப் பட்சமானது நீதியற்றது. இதனை யாழ்ப்பாணத்திலும் நடத்த வேண்டும்.

இலங்கை பல்கலைக் கழக வெளிநிலை தமிழ் மாணவ மன்றம் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தனிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு கூறப்பட்டு உள்ளது.

மகஜரில் மேலும் கூறப்பட்டு உள்ளதாவது:-

யாழ்நகரில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண உயர்தரப் பரீட்சைகள், யாழ் பல்கலைக்கழகத் தேர்வுகள் ஆகியன பிரச்சினையின்றி நடைபெறும் போது இப் பரீட்சைகளை இங்கு நடத்த மறுப்பது நியாயமாகாது.

[illegible] பொறுப்பினை ஏற்கத் தயாராகும் [illegible] பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் நடத்த உயர்கல்வி அமைச்சு முன்வரக்கூடும் என்று அறியவருகிறது.

இவ்வாறு மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

மகஜரைக் கையேற்ற யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக [illegible] அளித்துள்ளார் என்று மாணவர் மன்றப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

### யாழ் திட்டமிடல் பணியக கற்கை நெறி பரீட்சைப் பெறுபேறு

யாழ்ப்பாணம், பெப் 21 யாழ் திட்டமிடல் பணியகத்தால் சென்றாண்டு நடத்தப்பட்ட போஷாக்கு தொடர்பான கற்கைநெறிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவிகளுக்கான இக்கற்கை நெறியும் பரீட்சையும் யாழ் மாவட்டத்தில் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைபெற்றன.

உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், கரவெட்டி ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இவை நடைபெற்றன.

பரிசில் பெற்ற மாணவிகள் விபரம் வருமாறு:

தெல்லிப்பளை—

முதலாமிடம்: வி. ரூபரஜனி, இரண்டாமிடம்: கே. ரதிதேவி, மூன்றுமிடம்: பி. புவனகௌரி.

கோப்பாய்:

முதலாமிடம்: வை. கலாநிதி, இரண்டாமிடம்: கே. வேதகங்கா, மூன்றுமிடம்: எம். விமலாதேவி.

கரவெட்டி

முதலாமிடம்: எம். அனந்தீஸ்வரி, எஸ். கிரமணி, இரண்டாமிடம்: எம். பாலாம்பிகை, டி. மனோரஞ்சினி, மூன்றுமிடம்: கே. கோகுலராணி, கே உமாதேவி, கே. விமலா.

உடுவில்:

முதலாமிடம்: எஸ். மகாலட்சுமி. இரண்டாமிடம்: எம். சிவஞானமலர், என். சிவரஞ்சினி, எஸ். பதுமசேனா மூன்றும்இடம். ஆர். சசிகலா,

### இலக்கிய கருத்தரங்கு

யாழ்பபாணம், பெப் 21 '' சமூகம், இலக்கியம், கருத்துநிலை '' என்ற தலைப்பில் இலக்கியக் கருத்தரங்கு திங்கள் (24.02.86) காலை பத்து மணிக்கு நடைபெறும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையின் ஆதரவில் இக் கருத்தரங்கு இலங்கை ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

## பலாலி, வயாவிளான் பகுதிகளில் மயான அமைதி

பலாலி, பெப். 21 நேற்று பலாலிப் பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுற்றிக் ஹெலிக்கொப்டர்கள் மிகவும் தாளப்பறந்து கண்காணித்தது.

புதன்கிழமையன்று இப்பகுதியில் என்றுமில்லாதவாறு மூன்று சிறிய விமானங்கள் ஒன்றாகப் பறந்தன. இவ்விமானங்களே தாவடிப் பகுதியில் குண்டு வீசியதாக ஏற்கனவே கேள்வியுற்ற மக்கள் அங்கு நடந்த போது இங்கும் நடக்கலாம் எனப் பயந்து மிகப் பரபரப்படைந்தனர்.

புதன்கிழமை வயாவிளான் பகுதியில் இராணுவத்தினர் வெளிவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அடிக்கடி ''கிறனேற்'' குண்டுச் சத்தமும் கேட்டவாறு இருந்தது என்றுமில்லாதவாறு இரவில் 8 - 00 மணிக்கு ஹெலிக்கொப்டரில் இருந்தும் சுடப்பட்டது.

சில மணி நேரத்தில் இராணுவ முகாமுக்குத் திரும்பியதும் வெடிச் சத்தங்கள் ஓய்ந்தன.

யாரும் இறந்ததாகத் தகவல் இல்லை. வீதியால் சென்ற ஒருவருக்கு மட்டும் படுகாயம் ஏற்பட்டது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து பலாலி வயாவிளான் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் போக்குவரத்தும் மந்தமாகவே இருந்தன. பொதுவாக பலாலியிலும் அதனைச் சுற்றவரவுள்ள பகுதிகளிலும் மயான அமைதியே காணப்படுகின்றது.

### இரண்டாவது பிறந்த தின வாழ்த்து

செல்வன் இ. சுதாகரன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இராமநாதன்-மேரிபுஷ்பராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் சுதாகரன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 22ம் திகதி தனது மந்துவில்'அன்னதாரகை' இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பம்மா அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், மாமன்,மாமி, சித்தப்பா, சித்திமார் சகலரும் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

'அன்னதாரகை',
மந்துவில்,
புதுக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் துயருறும் தமிழர்

## மீட்சிபெற மாசிமக இலட்சார்ச்சனை

### துர்க்கையம்மன் ஆலயத்தில் ஏற்பாடு

-- சபா. புஷ்பநாதன் --

தமிழரின் சமயம் வாழ்க்கையில் தோன்றியது, வாழ்க்கையில் மலர்ந்தது வாழ்க்கையுடன் இணைந்தது. அதனால் அன்றட வாழ்க்கையில் அன்பின் பெருக்கம், அருளின் ஆக்கம், அறிவின் விரிவு ஆகிய சிறந்த இயல்புகளைப் பெறத் தக்கவாறு அதன் வழிபாட்டு முறை நெறிப்படடிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை பக்தர்கள் மிக்க ஒரு சிற்றூர். இனிய சோலைகள் சூழ்ந்த வளைவில் அன்னை பராசக்தி கொற்றவைத் திருக்கோலத்தில் துர்க்கையம்மனுக எழுந்தருளி இன்னருள் பாலித்து வருவதை உலகறியும்

சக்தியின் ஐக்கியம் இன்றேல் சிவம் தொழிற்படாது என்பது சைவ சித்தாந்தத் தெளிவு. சிவனின் அருட்சக்தியாக விளங்குபவள் அன்னை பராசக்தி. உலகம் உய்யவும் – உயிர்கள் சுபீட்சம் எய்தவும் பலவிதமான தொழில்களை அன்னை பராசக்தி நிகழ்த்தும்போது ஒவ்வொரு மூர்த்தமாக அவள் விளங்குவாள்.

செல்வத்தை வழங்கும் போது இலட்சுமியாகவும் ஞானத்தை அருளும் போது சரஸ்வதியாகவும், வீரத்தை வழங்கும் போது துர்க்கையாகவும் மக்கள் சக்தியை வழிபடுவர்.

துர்க்காதேவி என்பது பேதமுடையவளாக சொல்லப்பட்டிருக்கிறுள், ஜெயா, விஜயா, பத்ரா, ஸுமுகி, துர்முகி, ப்ரக்ஞா, வ்யாக்ரமுகி, சிங்கமுகி, பத்ரகாளி என ஒன்பது வகையாக துர்க்காதேவி சொல்லப்பட்டிருக்கிறுள்.

துர்க்கையை எல்லா நலம் குறித்தும் பிரார்த்திக்கலாம். பிராமண குமாரியாக நின்று உயிர் நலம் அளிக்கின்ருள். க்ஷத்திரிய குமாரியாக நின்று வெற்றி தருகின்ருள். வைசிய குமாரியாக நின்று லாபம் அளிக்கிருள். சூத்திர குமாரியாக நின்று திருமணம், பிள்ளைப் பேறு ஆகிய வரங்களைத் தருகிருள்.

நாட்டிலே மழை இல்லாது வரட்சியுற்ற நேரத்தில் மழையைப் பொழிவித்து, பசிப் பிணியைத் தீர்த்து இரட்சிப்பதால் சாகம்பரி, சதாட்சி என்ற நாமங்கள் ஏற்பட்டன. துர்க்சன் என்ற அசுரனைக் கொன்றமையால் துர்க்கா என்னும் சிறப்புப் பெயர் அவளுக்கு ஏற்பட்டது.

எக்காலத்தில் தர்மத்துக்கு குறைவு உண்டாகி அதர்மம் மிகுதியாகின்றதோ அப்பொழுதுநான் அவதரிப்பேன் என பார்த்தசாரதியான கண்ணன் கீதையில் அருளினன்.

எப்போது அரக்கர்களால் துன்பம் உண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரித்துப் பகைவர்களை நாசம் செய்வேன் என்பது தேவியின் அருள்வாக்கு.

தமிழ் மண்ணிலேயே தமிழ்மக்கள் அகதிகளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு இம்சைப் படுகிருர்கள். தமிழ் காக்க முனைந்தோரும் – தமிழ் மண் காக்க வந்தோரும் அரக்கர்களால் துன்பமுண்டாக்கப்பட்டு துயருறும் இவ்வேளையிலே கடந்த வெள்ளிக்கிழமை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமக இலட்சார்ச்சனை ஆரம்பமாகியது.

உலக மாதாவாகிய அன்னை பராசக்தி, சங்கு சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு, விஷ்ணு துர்க்கையாக, கருணையே வடிவாக எழுந்தருளி தன்னை சரண்புகும் அடியார்க்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கும் துர்க்கா தேவிக்கு இலட்சார்ச்சனை நடைபெறும் இன்றைய தினத்தில்'எங்களை காப்பாற்ற யாரும் இல்லை உங்களைத் தவிர' என்று எல்லா பக்தர்களும் கரம் குவிப்பர்.

கடந்த வெள்ளிமுதல் தொடர்ச்சியாக பத்து தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஏகாசிதி கலசாபிஷேகம் நிகழ ஏற்பாடாகியிருக்கிறது.

ஒரு நாமம் ஒருருவம் என்றும் இல்லாத தேவிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்களால் செய்யப்படும் அர்ச்சனை விழா சிறப்புறவும்—அதனுல் மக்கள் சிறப்புறவும் – வாழ்த்துகிருேம், வணங்குகிருேம்.



உதய சங்கற்பம்

மன ஒருமைப்பாட்டுக்குக் கூட்டுப்பிரார்த்தனை செய்; அதனுல் மனநிம்மதியுடன் எல்லையில்லா ஆனந்தமும் கிட்டும்.
--ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

21-02-86 உ.வே. 28

## தாவடித் தாக்குதலின் தாற்பரியம் என்ன?

தாவடி, இணுவில் பகுதிகளில் நேற்று நடைபெற்ற அரச படையினரின் புதியவிதமான தாக்குதல் பயங்கரம் நிறைந்தது. ஏற்கனவே இரத்த அழுத்தக்காரர், இருதய நோய்க்காரர் நிலையில் வாடும் தமிழ் மக்கள் அந்தச் சம்பவத்தால் நினைவிழந்த நிலைக்கு ஆளாகி இருக்கிருர்கள்.

யுத்த காலத்தில்தான் விமானங்கள் குண்டு வீசித் தாக்குவது உண்டு. ஆனுல் யுத்தப் பிரகடனம் எதுவும் இன்றி தாவடி, இணுவில் பகுதிகளில் விமானங்கள் திடீரென வட்டமிட்டன. குண்டுமாரி பொழிந்தன.

யுத்தம் சம்பந்தமான திரைப்படங்களில் வருவது போன்ற காட்சியை தாவடியில் நேரில் பார்க்கக் கூடியதாக இருந்ததாகச் சொல்லப்பட்டது.

தாவடித் தாக்குதலில் மரணமான இரண்டு சிறுவர்களின் சடலங்களைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அந்தோ கோரம்! நெருப்பில் கருக்கியது போல கறுத்த முண்டங்களாக அவை யாழ். ஆஸ்பத்திரிச் சவக்காலையில் கிடந்தன. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த அந்தச் சின்னஞ்சிறுசுகளும் அரசாங்கத்தின் எதிரிகளா?

தாவடித் தாக்குதல் புதுவிதமானதாக இருந்தது என்று நாம் சொல்வது வெறும் எழுத்துக்காகவல்ல. ஆகக்கூடியது சுமார் ஒரு மணி நேரம் நடந்த தாக்குதலில் அந்தச் சூழலிலுள்ள பயிர் பச்சைகள் எல்லாம் கருகி வாடிவிட்டன. சில மரங்களின் இலைகளைக் காணமுடியவில்லை.

மனிதர்களைக் கொன்று குவிப்பது மட்டுமல்ல தமிழர் பகுதியையே வனாந்தரமாக்கும் முதல் முயற்சியாக இதனைக் கருதாமல் வேறென்னவென்று கொள்வது? தாவடித் தாக்குதலின் தாற்பரியம் தான் என்ன?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதையே விரும்புவதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம், தனது படைகள் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நடத்த ஒருபோதும் அனுமதியாது.

எதிரிகள் எனக் கருதப்படுவோர் மீதே நாம் தாக்குதல் நடத்துகிருேம். ஆனுல் அவ்வேளையில் தமிழ்ப் பொதுமக்களும் பாதிக்கப்படுகிருர்கள். அதற்கு நாம் எதுவும் செய்ய முடியாது உள்ளது. பொதுமக்கள் தமக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு கூறி அரசாங்கம் தனது செயலை நியாயப்படுத்தப் பார்க்கிறது.

படைகளின் நடவடிக்கையை நியாயப்படுத்துவதோடு தனது பொறுப்பு முடிந்ததாக அரசு நினைக்கலாம். ஆனுல் பொதுமக்கள்...?

அவர்களது உயிர் அரசாங்கத்தால் பறிக்கப்பட்டபின், நியாயத்தைக் கேட்க யார் இருக்கப்போகிருர்கள்?

ஏதாவது ஒரு சம்பவத்தில் ஒருவர் இருவர் இறந்தால் அதற்குக் கூறப்படும் நியாயத்தை மற்றவர்களாவது கேட்டு அது சரியா, தவரு என்பதை ஆராயலாம். ஆனுல் எல்லோருமே செத்து மடியும் அளவுக்கு நிலைமை இருந்தால், நியாயத்தைக் கேட்க எவரும் இருக்கமாட்டார்கள்.

எனவே, செய்வதைச் செய்துவிட்டு, சட்டத்தைக் கையில் வைத்துக்கொண்டு நியாயப்படுத்துவதில் அர்த்தம் இல்லை. அது மனுநீதியாகாது, மனிதாபிமானமும் ஆகாது.

அரசு, சட்டம், நியாயம், நீதி, ஆகிய எல்லாமே மக்களுக்காகத்தான். அப்பாவி மக்கள் அழிந்தொழியும்போது எது கைவசம் இருந்தும், எதனைச் சொல்லியும் பலன் இல்லை.

ஏனைய மதங்களைப் போலவே பௌத்த மதமும் மனுநீதிக்கு முதலிடம் கொடுக்கின்றது. அந்த மதத்தைச் சார்ந்த இலங்கை அரசுத் தலைவர்கள், குறிப்பாக ஜனுதிபதி மனுநீதிக்கு முதன்மை இடம் கொடுத்து, இந்தத் தகராறுகளுக்கு மூலகாரணமான இனப்பிரச்சினையைத் தீர்க்க மனம் வைத்துச் செயலாற்றுவது அவசியம்.



பொய்யாமொழி

குறள்:

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

பொருள்:

விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமேயானுலும் அது விரும்பத்தக்கது அன்று.

ஞானக்கதிர்

# சமுதாயம் நெறிகெட்டுப் போவதற்கு

## முறையான தலைமைத்துவம் இல்லாமையே காரணம்

(சமுதாயத்திற்குரிய நெறியான தலைமைத்துவம் குறித்து சாய்ந்தமருது ஜம் இய்யதுல் உலமா சபை வெளியிட்ட கட்டுரை.)

சமுதாயம் என்பது பல்வேறு துறையினரையும், ஏற்றத்தாழ்வான அறிவு ஆற்றல், மனப்பான்மை கொண்ட பிரிவினரையும் தன்னுள் அடக்கிய ஒரு கூட்டு அமைப்பாகும்.

இவர்களுக்கிடையில் காணப்படும் மேடுபள்ள வித்தியாசங்கள் ஒரு கட்டுக் கோப்பின் கீழ், வகுக்கப்பட்ட ஒரே நெறியின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒரே தலைமைத்துவம் என்ற அச்சாணியின் கீழ் இயங்கினுலேயே அச்சமுதாயம் வெற்றிபெற முடியும்; வரலாறுகள் பல படைக்க முடியும்.

இறைவன் இத்தகைய மேடுபள்ள வித்தியாசங்களை ஏற்றத் தாழ்வுகளை அவனின் இறைத்தூதர்களான றஸூல் மார்களின் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளான்.

"நிச்சயமாக நாம் (றஷூல் மார்களான) அவர்களுக்கிடையில் சிலரை சிலரைவிட சிறப்பாக்கி வைத்தோம்." (அல்குர்ஆன்) என்பது இறைவனின் கூற்ருகும்.

ஒளியினுல் படைக்கப்பட்ட—இறைவனின் பணிகளிலும் அவனை துதிப்பதுமே – ஈடுபட்டுள்ள – வானவர்கள் எனப்படும் மலக்குகளுக்கிடையிலும் தலைமைத்துவம் உண்டு நரகத்தில் வேதனை செய்யும் பல்லாயிரம் மலக்குகளுக்கு தலைவராக மாலிக்கும், எல்லா அமரர்களுக்கும் தலைமையாக ஜிப்ரீலும் இறைவனுலேயே நியமிக்கப்பட்டுள்ளதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

கட்டுக்கோப்பான ஒரு சமுதாயம் –ஒரே வட்டத்துள் கூட்டாக இயங்கும் ஒரு சமூகம் – தனக்கென ஒரு தலைமைத்துவத்தை உருவாக்கி அதன் கீழ் இயங்கும். அவ்வாறு இயங்கினுலேயே வெற்றி பெற முடியும் என்பது வரலாறு கண்ட உண்மை.

இன்று உலகில் நடக்கின்ற பூதாகாரமான பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிப்படைக்காரணங்களை நாம் அலசுகின்ற பொழுது ஒன்று தலைமைத்துவம் அறவே இல்லாமை அல்லது சரியான முறையில் தலைமைத்துவம் இயங்காமையே காரணங்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

தலைமைத்துவத்தின் கட்டுக்கோப்பினை மீறிய சமுதாயங்கள் வரலாற்றின் சாக்கடைகளில் மிகஇலகுவாக வீசப்பட்டு – நாற்றமெடுத்த சமுதாயமாக – சபிக்கப்பட்ட சமுதாயமாக அழிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

இறைவன் கூட அல்குர்ஆனில் கூறுகின்ருன்,

"நிச்சயமாக நாம் அவர்கள் செய்து கொண்ட அநியாயத்தின் காரணமாக எத்தனையோ கிராமங்களை நாம் அளித்துள்ளோம்."

(அல்-குர்ஆன்)

தவருன நடவடிக்கைகளின் காரணமாகவே வரம்பு மீறிய ஆத், தமூத் கூட்டத்தினரும் அழிக்கப்பட்டதாக இறைவன் கூறுகின்ருன். எனவே இன்றைய முஸ்லிம் சமுதாயம் பலரக உள்ளீட்டு வெளியீட்டுக் காரணங்களால் மிக இலகுவாக ஏமாற்றப்படக்கூடிய - கொஞ்சங் கொஞ்சமாக அழிவின் விளிம்புக்கு அசைபோடுகின்ற – ஒரு சமுதாயமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

அவ்வாருனுல், எமக்குள் தலைமைத்துவம் இல்லையா?

ஏனில்லை; விண்ணளவு அரசியல் சாணக்கியம் படைத்தவர்கள் எத்தனை பேர்? அறிவுக்கடலில் கலைச் செல்வங்களை முத்துக் குளிக்கின்றவர்கள் எத்தனை பேர்? செல்வத்திலேயே திளைத்து அதனுலேயே தலைமைத்துவத்தை அடையத் துடிக்கும் குபேரர்கள் எத்தனை பேர்? இவர்களுக்கிடையில் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் பெற்று சமுதாயச் சக்கரத்தை தன் கைகளுக்குள் திணித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர்?

அத்தனைபேர்கள் இருந்தும் சமுதாயம் அழிவை விட்டு அகலவில்லை! எதிர்கால ஒளியை நோக்கிச் செல்லவில்லை!! விழிகள் ஆனந்தக்கண்ணீர் சுரக்கவில்லை!!!

காரணம் முஸ்லிம் சமுதாயத்தில் தளைத்திருக்கின்ற தலைமைத்துவச் செடிகள் அனைத்தும் தனிநபர் வேட்கையும்; சுயநலப் போக்கும்; ஏகாந்த மனப்பாங்கும் கொண்டவையாகத் திகழ்வதே காரணம் எனலாம்.

சுருக்கமாகச் சொல்வதானுல் எமது தலைவர்கள் அனைவரும் – நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்படுத்திக் கொண்ட வழிகாட்டிகள் அனைவரும் – இறைவாக்கை இதயங்களில் ஏற்காதவர்கள்; நபிவாக்கை நாவுகளில் அசைக்காதவர்கள்; பொதுவாக இறைவனின் வழியை விட்டு விலகி தமது அராஜக பலத்தினுல் சமுதாயத் தலைமைத்துவத்தை தனக்குள் அடக்கிக்கொண்டவர்கள்.

இவர்களால் ஒரு சமுதாயம் மட்டுமல்ல அவர்களது குடும்பங்கள் ஏன்? அவர்கள்கூட உருப்பட முடியாது. ஏற்றம் பெற முடியாது.

(மிகுதி அடுத்த வெள்ளி ஞானக்கதிரில்)

### மாவிட்டபுரம் குமார கோயில்

"மாவிட்டபுரம் குமார கோயில் பொதுச் சொத்தாகியது" என்ற தலைப்பில் இம்மாதம் 13 ஆம் திகதி உதயன் 3ஆம் பக்கத்தில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையிடம் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அச்செய்தி தொடர்பாக முன்னுள் தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு பின்வருமாறு எழுதியுள்ளார்:-

13-2-1986-ல் உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக சின்னத்தம்பி திருநாவுக்கரசு, நடேஸ்வராக் கல்லூரி முன்னுள் தலைமையாசிரியராகிய நான், பகிரங்கமாக வெளிப்படுத்துவது யாதெனில் மேலே குறிப்பிட்ட கோயிலும் கோயில் கட்டடங்களும், இவை அமைந்து உள்ள 60 பரப்புக் காணியும் இதன் நிர்வாகமும் சொரியலாய் எனக்கும், ஆறுமுகம் செல்லையாவுக்கும் உரியது

வே.பஞ்சாட்சரம் இச் சொரியல் காணியில் 5 பரப்புக் காணியை கோயிலுடன் நிரந்தரமாகக் கொடுக்க எவ்வித உரித்தும் உடையவர் அல்லர்.

மேலும் 50 வருடமாக இக்கோயிலில் வழிபடுபவர்களுக்கு ஒரு வித தடையும் இல்லாமல் நிர்வாகத்தை ஆற்றிய என்னைக் கலந்தாலோசிக்காமல் கோயில் பரிபாலன சபை நியமிக்க இவருக்கு யாரும் அதிகாரம் கொடுக்கவில்லை.

இவ்விடயம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்— என்று உள்ளது.

[குறிப்பு:- இக்கோயில் சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக மேற்கொண்டு எந்தச் செய்தியும் இனிமேல் வெளியிடப்படமாட்டாது. — ஆசிரியர்—]

### கிளிநொச்சி மாவட்டத்தில் 190 பேருக்கு

## வீடமைப்புக் கடன்

கிளிநொச்சி, பெப் 21

கிளிநொச்சி மாவட்டத்தில் பத்து லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் 190 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்பட விருக்கிறது.

இதற்காக சுமார், ஒன்பது லட்சத்து 55 ஆயிரம் ரூபாவை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒதுக்கியிருக்கிறது.

இந்த 190 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 27 கிராமசபைகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் 25 பேருக்கு முதற் கட்டமாக கடந்த ஜனவரியில் முப்பத்தையாயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினுல் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களில் சுமார் 80 வீதம் மீள அறவிடப்பட்டால் மட்டுமே இவ்வருடம் கடன் வழப்பட வேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 50 வீதமே அறவிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை கிராமசபைகளுக்கும் கடன் வழங்க மாவட்டக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் இரு. பி. யேக்கப் மரியான் தெரிவித்தார்.

கிளிநொச்சி தனிமாவட்டமாகிய பின்னர் கடந்த ஆண்டு 164 பேருக்கு சுமார் 8 லட்சத்து 48 ஆயிரம் ரூபா கடனுக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடன் பெற்றவர்கள் சுமார் 60 வீதமான வேலைகளையே பூர்த்தி செய்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு 194 பேருக்குக் கடன் வழங்கப்பட்டது.

இவ்வாறு இரு ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட கடன்களில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பணம் மீளச் செலுத்தப்படாமல் பாக்கியாக இருக்கிறது.

இதனுல் இம்முறை வழங்கப்பட விருக்கும் ஒன்பதரை லட்சம் ரூபா பணத்தில் பாக்கிப் பணம் போக மிகுதி ஏழரை லட்சமே கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிடைக்கும். இப்படி அவர் மேலும் சொன்னுர்.

சமய சந்நிதிகளில்

### மஹோற்சவம்

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் கடந்த (13-2-86) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் (23.2:86) ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் (24.2.86) திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் கீரிமலைக் கடற்கரையோரமாக அமைந்திருக்கிறது. நகுலமுனிவர், மாருதப்புரவீகவல்லி முதலானேர் வழிபட்டு உய்ந்த தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆலய அறங்காவலர் பிரதியுபகாரம் கருதாது

## சேவை புரிவது அவசியம்

யாழ்ப்பாணம்,பெப்.21

ஆலய திருப்பணிகளில் ஈடுபடும் அறங்காவலர்கள் பிரதியுபகாரம் கருதாது சேவையில் ஈடுபடவேண்டும்.

நயினை தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் புதிய அறங்காவலர் சபையின் தலைவராகப் பதவியேற்ற திரு த. குலசேகரம் மேற்கண்டவாறு சொன்னுர்.

புதிய சபையின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

அறங்காவலர் சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. குலசேகரம் (உதவி அரசாங்க அதிபர் – பொதுசனத் தொடர்பு அதிகாரி, கச்சேரி யாழ்ப்பாணம்) செயலாளர்: திரு. க. கனகசபாபதி, பொருளாளர்: திரு.சோ.செல்வரத்தினம்.

புதிய தலைவர் திரு க. குலசேகரம் நன்றி தெரிவித்துப் பேசினுர்.

### 12 பெண்கள் உட்பட 43 பேர்

## இன்னும் தடுத்துவைப்பு

திருகோணமலை,பெப், 21

பெப்ரவரி முதல் பதினைந்து தினங்களில் கைதானவர்களில் 43 பேர் இன்னமும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 12 தமிழ் இளம் பெண்கள் ஏனையோர் தமிழ்இளைஞர்கள்.

திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி இவ்வாறு அறிவித்து இருக்கிருர்.

கைது செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை இணைப்பதிகாரி, திருமலை பிரஜைகள் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மூதூரில் தமிழ்க் கிராமங்களில் வசித்து வந்தவர்கள் ஆவர்.

12 பெண்களும் இளம் வயதினர்.

### கல்முனைக்கு பட்டதாரி ஆசிரியர்கள்

அம்பாறை, பெப். 21

சேவை முன் பயிற்சியை முடித்துக் கொண்ட 30 கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்கள் கல்விச்சேவை ஆணைக்குழுவினுல் கல்முனை கல்வி மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கல்வி மாவட்டதிலுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு, மேற்படி முப்பது பட்டதாரி ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Technical Courses**
ஆரம்பம்: 1 - 3 - 86
1. City and Guilds - London Exam.-1987
Qualification - G.C.E. (O/L) Maths.
2. மோட்டர் றீ வைண்டிங் பயிற்சி
காலம் — 3 மாதம்
3. வயறிங் — காலம் ஒன்றரை மாதம்
ஒமேகா மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சமுநாடு முன்பாக)

# உதயன்

21 02. 1986

**OMEGA** UNDER TAKES
1. Repairs and Re-Winding of all Electrical Appliances.
2. வயறிங் வேலைகள் யாவும்.
சகல வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்யப்படும்.
ஒமேகா மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சமுநாடு முன்பாக)



தாவடிப் பகுதியில் அரச படைகள் நேற்று முன்தினப் நடத்திய விமானக் குண்டு வீச்சில் சேதமடைந்த வீடொன்றையும், குண்டுகள் கக்கிய நெருப்பில் கருகி நிற்கும் புகையிலைக் கன்றுகளையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

★ இந்தியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா

# மூன்று நாடுகளின் காபந்து நிர்வாகம் தமிழ் மாநிலத்தில்

## மக்கள் மன்றம் கோருகிறது

யாழ்ப்பாணம், பெப். 21

தற்காலிகமாக ஒருவருடத்திற்கு செயற்படக்கூடியதாக, மூன்று பொதுநல அமைப்பு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கூட்டமைப்பு மூலம் ஒரு காபந்து நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பை அந்த அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும்.

கட்டு மீறுகின்ற ஆயுதப்படையை ஸ்ரீலங்கா அரசு வாபஸ் பெறுவதற்கும்–

சீர்குலைந்த சிவில் நிர்வாகத்தை சீரமைப்பதற்கும்–

தமது பாரம்பரிய இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட அகதிகளை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும்–

உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்க இத்தகைய காபந்து நிர்வாக அமைப்பு அவசியமாகும்.

யாழ்ப்பாணம் மக்கள் மன்றம் இப்படி தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இத்தகைய நிர்வாகத்தை நிறுவ இந்தியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளே உகந்தவை என்று மன்றம் கருதுகிறது.

காபந்து நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு பேற்படி மூன்று நாடுகளையும் கேட்டுக் கொள்ளும்படி தமிழ் மாநிலப் பொது மக்களையும், ஸ்ரீலங்கா அரசையும் மக்கள் மன்றம் வேண்டுகிறது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்கள் கானல் நீராக மாறிக் கொண்டு போகிறதும், கோரச் சம்பவங்களும், ஆயுதப்படையினரின் அட்டூழியங்களும் தமிழ் மாநிலத்தில் பல இடங்களில் அடுத்தடுத்து நிகழுகின்றன.

திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் எம் இனத்தை பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகள் தினமும் நிகழ்கின்றன. அவற்றையெல்லாம் தனித்தனியாக ஆட்சேபிப்பது பயனற்ற விடயம்.

தமிழ் மாநிலத்தில் அரச நிர்வாகம் அற்றுப் போயுள்ளது.

ஏராளமான ஆயுதப் படைகளும், முகாம்களும், ஊர்காவற்படைகள் என்ற கும்பலும் தமிழ் மாநிலத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அத்துமீறிச் செயல்படுவது நாளாந்தம் நிகழ்கின்றது.

பலாத்கார செயல்களினால் பாதிக்கப்படுபவர்கள் நீதியோ, நிவாரணமோ பெறமுடியாத நிலைமை நிலவுகிறது.

''யுத்த நிறுத்தம்'' என்ற ஒழுங்கு போலியாகி விட்டது.

இதனால் இத்தகைய அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்தியாவில் பத்தாயிரம் பேர் கைது!

புதுடில்லி, பெப். 20

இந்தியாவில் உணவுப் பொருள் விலையேற்றத்தை ஆட்சேபித்து இந்திய நாடாளுமன்றத்தின் முன்பாக ஊர்வலம் செல்ல முயன்ற பத்தாயிரம் பேரை பொலிஸார் இன்று (வெள்ளிக்கிழமை) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 60 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோரும் அடங்குவர்.

## இராணுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்கத் தொடங்கி விட்டார் என்று தெரிய வந்துள்ளது.

அரசியல் தீர்வு காணுவதில் ஏதோ புதிதாகச் சொல்வதாகப் பாசாங்கு செய்யும் திரு ஜெயவர்த்தனவின் செயலையும் இராணுவ தீர்வு காணும்படி அவருக்கு வழங்கப்படும் பிழையான ஆலோசனைகளையும் திரு. காந்தி கவனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

இந்தப் பின்னணியில் தான் இந்தியாவின் கடுமையான போக்கு இருப்பதை இலங்கை அரசும் அவதானிக்கத் தொடங்கியுள்ளது.

— இப்படி திரு ரெட்டி எழுதியுள்ளார்.

## குண்டு வீச்சை தடுத்து நிறுத்துக!

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 21

ஆகாயத் தாக்குதல், இராணுவ நிலையங்களில் இருந்து குண்டுகள் பொழிவது ஆகியவற்றை உடன் நிறுத்தும்படி யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியைக் கோரி உள்ளது.

சங்கத்தின் அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று நேற்றுக் காலை, யாழ் சட்ட நூலகத்தில் தலைவர் திரு எஸ் ஆர். கனகநாயகம் தலைமையில் கூடியது.

இக் கூட்டத்திலேயே மேற்கண்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆகாயத் தாக்குதல், குண்டு பொழிவது ஆகிய நடவடிக்கைகளினால் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர்.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயக் கொடுமையை விட இது படுமோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

இராணுவத் தீர்வு காணுவதை விலத்தி தமிழ்மொழி பிரதேச உரிமைகளை வழங்கும் அரசியல் தீர்வு காணுவது அரசின் தலையாய பொறுப்பு ஆகும் - இப்படி அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டு உள்ளது.

யாழ்ப்பாண வலய சட்டத்தரணிகள் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கை குறித்து ஆராய்வது எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக சங்கச் செயலாளர் திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## புதன்..

1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஈ. பி ஆர். எல். எவ். இயக்கம் குற்றம் சாட்டியிருக்கிறது.

கேந்திர ஸ்தானம் ஒன்றில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இயக்கம் ஒன்றின் காவல் குழுவிடம் எமது உறுப்பினர்கள் தம்மை இனம் காட்டிவிட்டு முன்னேறிக் கொண்டிருந்தனர்.

அந்த வேளையில் எமது உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்த பகுதியிலிருந்து 50 யார் முன்பாக நின்று கொண்டிருந்த அந்த இயக்கத்தின் மற்றொரு குழுவினர் எமது உறுப்பினர்களை நோக்கி எதுவித எச்சரிக்கையும் செய்யாமலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்த வேளையில் எமது உறுப்பினர்கள் சமிக்ஞை மூலமும் உரத்த சப்தமிட்டும் தங்களை இனம் காட்டினர். எதிரில் நின்றவர்கள் சக இயக்கத்தவர்கள் என்பதைத் தெளிவாக இனம் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்ததால் தான் எமது உறுப்பினர்கள் பதில் தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை.

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தெரிவித்திருக்கிறது.

## திம்புத் திட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சட்ட விரோதச் செயல்களையும் கைவிட வேண்டும். வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ இருக்கும் வன்செயல் தொடர்பான முகாம்களை மூடிவிட வேண்டும். அமைதியும் சகஜமும் ஏற்பட வழி செய்ய வேண்டும்.

3. அங்கீகாரம் பெறாத படைக்கலங்கள், போர்த் தளபாடங்கள், ஆயுதங்கள் ஒரு மாத காலத்தினுள் அரசாங்கம் குறிக்கின்ற ஓர் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

4. இணக்கம் காணப்பட்டால் நாட்டில் சகஜநிலை ஏற்படத்தக்கதாக பந்தோபஸ்துச் செயற்பாடுகள் குறைக்கப்படும். அவசரகாலச் சட்ட விதிகள் தளர்த்தப்படும்.

5. அரசமைப்புச் சரத்துக்கள் எல்லோராலும் ஏற்கப்பட்டு, தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டால் அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்.

(அ) 1983 ஜூலைக்கும் 1985 ஆகஸ்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இனக்கலவரம் சம்பந்தமான எந்தக் குற்றச் செயல் தொடர்பாகவும் நீதிமன்றத்தில் அல்லது வேறு விதமாக் விசாரணையை எதிர் நோக்கி இருப்போருக்கு எதிரான சகல வழக்குகளும், நடவடிக்கைகளும் வாபஸ் பெறப்படும்.

(ஆ) அவ்வாறான குற்றச் செயல்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும்.

(இ) புதிய வழக்குகள் தொடரப்படமாட்டா.

6. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகச் செயற்பாடு, சட்ட ஒழுங்கு அமுல் ஆகியவற்றிற்கு எவரும் இடையூறாக இருக்கமாட்டார்கள்.

7. உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் அகதிகளாக்கப் பட்டிருப்போர் தங்கள் இடங்களுக்குத் திரும்பவும், அவர்களுக்கு புனர்வாழ்வு வசதியளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

8. இணக்கம் ஏற்பட்ட பின்னர் நிலவும் தீவிரவாதச் செயல்களை தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

9. ஆயுதங்களை கீழே போடும் நிபந்தனையை கடைப்பிடிக்காமல் தவறுபவர்களுக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க முறையான நிர்வாக இயந்திரம் ஏற்படுத்தப்படும்.

இவையே அந்த ஒன்பது ஏற்பாடுகளுமாகும்.

## யாழ் நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தே ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

யாழ்நகரில் உள்ள பல பாடசாலைகளும் பத்து மணியுடன் மூடப்பட்டு மாணவர்கள் வீடு திரும்பினர்.

அரச அலுவலகங்களும் மூடப்பட்டு ஊழியர்கள் வீடு திரும்பினர்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களால் இரு பெண்கள் காயமுற்றனர்

ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டு வீடு திரும்பும் தருணத்தில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கனகரத்தினம் பரமேஸ்வரி (36 வயது) காயமுற்றார்.

குண்டுவெடிப்புச் சத்தத்தினால் பதற்றப்பட்டு ஓடியவர்களில் ஒருவரான பசுபதி விஜயலஷ்மி (35 வயது) மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதுண்டு காயமுற்றார். அவர் அரியாலையைச் சேர்ந்தவர்.



# விளையாட்டரங்கு

## அனுபவம் மிக்க பழையவர்களும் புதிய முகங்களும் இணைந்த சென். பற்றிக்ஸ் கிரிக்கெட் அணி

### இன்று யாழ். இந்துக் கல்லூரியுடன் மோதல்

— விளையாட்டுச் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், பெப். 21

வட பகுதி கிரிக்கெட் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

வட பகுதியில் இருக்கும் கல்லூரி கிரிக்கெட் அணிகளை விளையாட்டு அரங்குப் பகுதியிலே ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

அந்த வரிசையில் முதலாவதாக யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி இடம்பெறுகிறது.

திறமைமிக்க-அனுபவம் மிக்க பழைய முகங்களையும், துடிதுடிப்பான திறமையான இளவட்டங்களையும் கொண்ட ஒரு கூட்டு அணிதான் சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இவ்வருடத்தில் இதுவரை இரண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டங்களில் கலந்து கொண்டிருக்கும் இந்த அணி, ஓர் ஆட்டத்தில் வெற்றியும் ஓர் ஆட்டத்தில் தோல்வியும் அடைந்திருக்கின்றது.

அணித் தலைவர் எஸ். ஏ. கிளஸ்ரன்:- நிதானமாக ஆடும் சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை நடுத்தர வேக பந்து வீச்சாளர்.

ஏ. ரி. ஏ. செல்வராஜா: இவர் அணியின் உபதலைவர். விக்கெட் காப்பாளர் வலதுகை துடுப்பாட்டக்காரர்.

ஜி எஸ். சவரிமுத்து:- நிதானமாக நின்று லாவகமாகத் துடுப்பெடுத்தாடும் இடதுகைவீரர் அணியின் தொடக்கத் துடுப்பாட்ட வீரர்.



கிளஸ்ரன்

ஜே. ஆர். பத்திநாதர்:- வலதுகை துடுப்பாட்ட வீரர். அணியின் மற்றைய தொடக்கத் துடுப்பாட்ட வீரர்.

என். குணேஸ்வரன்:- வலதுகை வேகப்பந்து வீச்சாளர், பற்றிக்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர்.

சி. ஆர். ஜெயவேந்திரா:- அணியின் வலதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர். பந்துகளை பாய்ந்து தடுத்து சிறந்த பந்துதடுப்பாளர் என்று விமர்சிக்கப்படுபவர்.

ஏ. எம். நிமலராஜ்:- நிதானமாக துடுப்பெடுத்தாடக் கூடிய வலதுகை ஆட்டக்காரர்.

இவர்கள் ஏழு பேரும் அணியில் கடந்த இருவருடங்கள் அங்கம் வகித்தவர்கள்.

ஏனைய வீரர்கள் அனைவரும் அணிக்கு புதுமுகங்கள்.

பி. ஆதவன்:- அணியின் ஆரம்ப வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.

ஆர். எம். ஏ வின்ஸ்லோ:- இடதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர்.

என். சி. இரட்ணனந்தன் வலதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர்.

ஜெ. ஜெயகுமார், வலதுகை நடுத்தரவேகப் பந்து வீச்சாளர்.

ஆர். ஐ. ரேஜஸ்:- வலதுகை துடுப்பாட்ட வீரர்.

அணியின் மேலதிக விக்கெட் காப்பாளர் ரி. நித்திலநாயகம். பி. ஈ. ஏபிரகாம், ஜே. சி. ரி. மரியநாயகம் ஆகியோரும் அணியில் இடம் பெறுகின்றனர்.

திரு. பிரான்ஸ்சிஸ் கந்தையா அணிக்கு பயிற்சியளித்து வருகிறார்.

விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு அல்பேர்ட் சந்தியாப்பிள்ளையின் மேற்பார்வையில், அணியின் பொறுப்பாசிரியர் திரு. டபிள்யூ ஜே. நவரெத்தினம் அணியை சிறப்பாக வழிநடத்தி வருகிறார்.

சென் பற்றிக்ஸ் அணி இன்று யாழ் இந்துக் கல்லூரியுடன் வருடாந்த சினேகபூர்வ ஆட்டத்தில் மோதுகிறது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி புதிய மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் அடிப்படையில் இந்த ஆட்டம் நடைபெறும்.





தாவடியில் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமான வயோதிபரின் சடலத்தை இடப் பக்கத்திலும்—
யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட ஷெல் குண்டுக்கு இலக்காகி உயிரிழந்த எம். பத்மநாதனின் சடலத்தை கீழேயும் காணலாம்.

## நீத்தார் பட்டியல்

### நாகலிங்கம் சிதேவிப்பிள்ளை

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் (முத்து) சிதேவிப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ் சென்ற பிரபல வர்த்தகர் வேலுப்பிள்ளை கதிரவேலு நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தியாகராசா (உதவித் தொழில் ஆணையாளர், ஊழியர் சேமநிதி, யாழ்ப்பாணம்) தவமணி, சோமசுந்தரம் (நீர்ப்பாசன இலாகா ஓட்டுசுட்டான்) ஏகாம்பிகை (கனடா) இந்திரா, சதா(France) மகேந்திரராஜா பொறியியலாளர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகராணி, நவரெத்தினம் (ஓய்வு பெற்ற ஜெயிலர் யாழ்ப்பாணம்) ஞானேஸ்வரி, சோமசுந்தரம் (தொழில் நுட்ப ஆய்வுகூட பரிசோதகர் கொழும்பு) திருவருள் (France) ரவீந்திரா (Londan) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கரம்பொன் கிழக்கு இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக 21-02-86 பிற்பகல் 4 மணியளவில் கரம்பொன் கிழக்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இங்ஙனம்
ந. தியாகராசா
335, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 21 - 2 -1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org